**கவனிக்க.-** *02.11.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1784 - 2012 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2012.11.09

*1784 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | – |
| சட்டமூலங்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | – |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | – |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | – |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | – |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | – |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | – |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | – |
| நொத்தாரிசுமார் பட்டியல் | – |
| நானாவித அறிவித்தல்கள் | 152 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2012, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

### (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்

ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

கொழும்பு 1, சதாம் வீதி. 86-2/1 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை யுடைய பேர்னார்ட் டுவர்ஸ் அன்ட் ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் (பீவீ 1697) விடயத்திலும்,

இல. மே. நீ. (குடியியல்) 42/2012/சீஓ, தன்மை : ஒடுக்குதல்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழும் அதன் நியதிகளின்படியும் நீதிமன்றத்தால் ஒடுக்கு தலுக்கான விண்ணப்பமொன்றின் விடயத் திலும்.

டால் லங்கா ஹோட்டல்ஸ் பீஎல்சீ, இல. 25, கோல்பேஸ் மத்திய வீதி, கொழும்பு 1

..................... மனுதாரர்.

அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் மேற்கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான மனுவொன்று இல. 25, கோல்பேஸ் மத்திய வீதி, கொழும்பு 1 என்னும் முகவரியைச் சேர்ந்த டால் லங்கா ஹோட்டல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டால் 2012, செத்தெம்பர் 25 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும், மேற்படி மனு 2012, திசெம்பர் 12 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது. மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துனர் விசாரணையின்போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துனர் எவருக்கும் அத்தகைய பிரதி அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் கொடுத்துதவப்படும் :-

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
இல. 216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்படி மனுவின் விசாரணையின்போது தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் தமது எண்ணத்தைப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேற்கூறப்பட்ட எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம் நிறுவனத்திற்குச் சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயரும் முகவரியும் அல்லது நிறுவனமொன்றெனில் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 2012, திசெம்பர் 11 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

11-422

---

### சிறீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

விதுர விக்ரமநாயக்க பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''சிறீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) பௌத்த கலாசாரத்தைப் பேணியொழுகவும் அவற்றை மேம்படுத்தவும் அதற்குரிய பணிகளில் ஈடுபடுதலும் ;

பிறவும்.

விதுர விக்ரமநாயக்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
களுத்துறை மாவட்டம்.

11-528

## இலங்கை ஹிரா மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹுனைஸ் பாரூக் பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "இலங்கை ஹிரா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த பவுண்டேஷன் ஐக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) பெண்களினதும் சிறுவர்களினதும் எல்லா உரிமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

பிறவும்.

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

11-527

---

## ஏர்ல் குணசேகர மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஏ. எச். எம். அஸ்வர் பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "ஏர்ல் குணசேகர மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த ஏர்ல் குணசேகர மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) பாடசாலைக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி வரையான பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் மற்றும் பாடசாலைகளுக்கும் உதவி வழங்குதல் ;

(2) சாதி, சமயம், குல பேதமின்றி பொதுமக்களது மேம்பாட்டிற்காக சமய, கலாசார, கலை, விளையாட்டு, பல்தரப்பட்ட சங்கங்களின் அமைப்புகளுக்கு உதவி வழங்குதல் ;

(3) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உற்பத்தி, சேவை ஆகியவற்றின் மேம்பாட்டிற்குத் தேவையான மூலதனத்திற்கு குறைந்த ஆகுசெலவின்கீழ் கடனுதவிகளை வழங்குதல் ;

பிறவும்.

ஏ. எச். எம். அஸ்வர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-474

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.